உ

சிவமயம்.

திருச்செந்தூர்
சுப்பிரமணியக்கடவுள்பேரில்
மாதப்பதிகம்.
திருப்பழனிவடிவேலர்பேரில்
வாரப்பதிகம்.

குயப்பேட்டை

வீ. ராஜுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

சென்னை.

வித்யாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

உ

கடவுள் துணை.

திருச்செந்தூர்

சுப்பிரமணியக்கடவுள்பேரில்

மாதப் பதிகம்.

கலித்துறை.

சித்திரைமாதம்.

சித்திரைதன்னிலும் பாதாரவிந்தம் நிதந்தொழு வேன், உத்திரஞ் சொல்லென்று போற்றினிற் பேனு மையாள்மகனே, சத்துருசங்கார வேலையுமுன்னையுந் தான்மறவேன், சித்திரை மாதம் வருவேன் திருச்செந் திலாதிபனே.

வைகாசிமாதம்.

ஓய்யாரமயின்மீதிலேறி உகந்தெனக்கு
ஐயாவரங்கொடுத் தருள்புரிவாயரிமான்மருகா
மெய்யாறுவாயு முகமாறுமுன்னைக்கண்டுதொழ
வைகாசிமாதம்வருவே செந்தூரினில்வாழ்பவனே.

ஆனிமாதம்.

வானிலுகையளித்தோன் மருகாவடிவேல்முருகா
மேனிமெலிந்துவாடுவனோ வினை தீருமென்று
நானிலந்தன்னிலிருந்தே யென்னாலும்நடந்தபடி
ஆனிப்பிறந்துவருவேன் செந்தூரினிலாண்டவனே.

ஆடிமாதம்.

தேடியநானுமுன்பாதாரவிந்தந் தினந்தொழுவேன்
வாடியிருந்துமயங்குவனோ வடிவேல்முருகா
கூடியகொன்றைக்குறமாதை யுன்னையுங்கும்பிடநான்
ஆடிபிறந்துவருவேன் செந்தூரினில்வாழ்கந்தனே.

ஆவணி மாதம்.

பூவணிபூண்டகுறமாதைத் தேடிப்புனத்தருகே
மரவணியேறியேவந்து நிற்பாய்மதுராபுரியில்
தாரணிதன்னில் நரியைப்பரியென்றுதானகட்டும்
ஆவணிமாதம்வருவேன் செந்தூரிலாண்டவனே.

புரட்டாசிமாதம்.

திகட்டாதசெங்கனிவாயமுதுண்டு தினைப்புனத்தில்
அருட்டாமலோடிவருகுவாய் அரனார்மகனே [து
திரட்டாதவள்ளிதெய்வானையுன்னையும் நிதந்தொழு
புரட்டாசிமாதம்வருவேன்செந்தூரினில்புண்ணியனே

அற்பசிமாதம்.

கற்பழியாதமாதைத் தேடிக்கானகத்தில்
கொப்பிலும்நாடியுகந்து நிற்பாயுமையாள்மகனே
செப்பிலுஞ்செய்யமொழியாளேயும்மையுஞ்சேவைசெ
ய்ய, அற்பிசிமாதம்வருவேன்செந்தூரில்வாழ்பவனே

கார்த்திகைமாதம்.

போத்தியாநானுன் பாதாரவிந்தம்புகழ்பெறவே
நேத்தியதாகஅருள்புரிவாய் நெடியோன்மருகா
சாத்தியமாலேயுந்தெய்வானே யுன்னேயுங்கண்டுதொழ
கார்த்திகைமாதம்வருவேன் செந்தூரில்வாழ்பவனே.

மார்கழிமாதம்.

ஆறுகையின்மயின்மீதினி லேறியனுதினமும்
பேறுகமாக அருள்புரிவாய் புவியாளவந்த
தாறுகமானகுரமாதை யுன்னேயுந்தான்றெழுக
மார்கழிமாதம்வருவேன் செந்தூரில்வாழ்பவனே.

தைமாதம்.

மையாரும் பூங்குழல் மன்னுளேத்தேடி வனத்த
ருகே ஒய்யாரமாக நடந்துவந்தா யுமையாள் மகனே
மெய்யானதெய்வமென்றே யெண்ணித்தேடி விரும்பி
யநான், தைமாதந்தோறும்வருவேன் செந்தூரினிற்ச
ண்முகனே.

மாசிமாதம்.

மாசிப்பழனிதிருவேரகம்கன்னியாகுமரி
தேசிப்பரிஎன்னுஞ்சேவிக்குஞ் செங்கண்மால்மருகா
பூசிபநீரையுங் கைவேலையுங்கண்டு புகழ்பெறநான்
மாசிமாதம்வருவேன் செந்தூரினில்வாழ்பவனே.

பங்குனிமாதம்.

சங்குநீராடித்திருப்பாற்கடல்தன்னில் தையல்மாமருகா, எங்குநீராகநிறைந்து நிற்பாயென்னைக் காத்தருள்வாய், கங்குலமான குறமாதையுன்னையுங்கண்டுதொழப் பங்குனிமாதம் வருவேன் செந்தூரிற் பதிதனிலே

திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி பேரில்
மாதப் பதிகம்
முற்றிற்று.

உ

முருகன் துணை.

சுப்பிரமணியக்கடவுள்பேரில்

வாரப்பதிகம்.

கலித்துறை

ஆதித்தவாரம்.

வாதித்தசூரரை வடிவேலெடுத்து வளைந்துகொண்டு, சாதித்துவென்ற தயாபரனே யெந்தன்சஞ்சலத்தைச், சோதித்துபார்த்து தயர்தனைநீக்கி நற்றேசையுடன், ஆதித்தவாரம்வருவாய்பழனி நல்லாண்டவனே.

சோமவாரம்.

உங்கள்தகப்பன் காக்கனிக்கா யுலகேழுஞ்சுற்றி
கண்கள் சிவந்திடவந்து நின்றுயந்தகபடதுபோல்
எங்கள்மேற்குற்ற மியாதிருந்தா லுமிறங்கிமனந்
திங்கட்கிழமைவருவாய் பழனிநற்றேசிகனே.

மங்களவாரம்.

கொவ்வாயிதழுண்ணும் வள்ளிதெய்வானைக்குகந்த
தவ்வாயகப்பட்டபாம்பதுபோலுந்தமிழ்மறையோன்
அவ்வாயிற்சிக்கி அலைப்படாதடியாற்கிரங்கிச்
செவ்வாய்க்கிழமையில்வருவாய் பழனிநற்றேசிகனே.

சௌமியவாரம்.

சதமெனும்வேத முதலெழுத்தோததலையிற்குட்டி
தவிமெனக்கேட்டருள் வேலவனேயென்வினையகல
பதமதுபாடக் கலித்துறைசொல்லவும்பண்புதந்து
புதனெனும்வாரம்வருவாம் பழனிநல்புண்ணியனே.

குருவாரம்.

கருவாயெழுத்திருகைதான் முனைத்துக்கழிந்தபின்பு
உருவாய்பிறப்பித்தவுத்தமனே ஒருவுண்மைதனை
திருவாய்மலர்ந்து முன்னின்றிடுவாய்நற்சேவலுடன்
குருவாரநாளில்வருவாய் பழனிநற்குருபரனே.

சுக்கிரவாரம்.

உல்லிற்கருதிநின்றஞ்சலிசெய்வோர்க்குவந்துவந்து
அள்ளிவிபூதியிடு மையனேயலியார்க்கிரங்கித
வள்ளிதெய்வானையிடன் மயிலேறிமகிழ்துகந்து
வெள்ளிக்குழமைவருவாய் பழனிநல்வேலவனே

சனிவாரம்.

சனியான்பாவியிளமையிலே எனைத்தான்றொடுத்தா
இனியாகிலுஞ்சற்றிரங்கலையேமனதெப்படியோ
பனியானதைவந்து கதிரோன்விலக்கிடும்பாவனைபோ
ல், சனிவாசநாளில்வருமாய்பழனிச்சண்முகனே.

வாரப்பதிகம்-முற்றிற்று.